<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு.**M.**நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 933/2023 நாள்: 31.10.2025 வா.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேனாதிபதி | தொழில் | : | விவசாயம் |
| த/பெ | : | கருப்பண்ண கவுண்டர் | கிராமம் | : | பூளவாடி |
| வயது | : | 71 | தாலுகா | : | மடத்துக்குளம் |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>முதல் விசாரணை -</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 19.10.2017 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் எண்.3840/2017 அசல்

வா.சா.ஆ.2 – பிரதிவாதி எனக்கு கொடுத்த காசோலை எண்.437049 அசல்

வா.சா.ஆ.3 – 28.07.2023 தேதியிட்ட எனது வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.4 – 23.08.2023 தேதியிட்ட பிரதிவாதியின் அனுப்பிய பதிலறிவிப்பு அலுவலக நகல்

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.10.31 14:32:31 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.